AADHAV ARJUNA
General Secretary

## அன்புக்கும், மரியாதைக்கும் உரிய, கூடைப்பந்தாட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகளுக்கு என்னுடைய வணக்கம்!

கடந்த 30.12.2017 அன்று எழுதிய கடிதத்திற்கு பிறகு சுமார் 5 மாதங்கள் நாம் செய்த பணியையும், செய்ய வேண்டிய பணியையும் இந்த கடிதத்தின் மூலம் உங்களிடம் பகிர்கிறேன்.

நாம் கூறியதை போல TNBA Association வலிமையை நம் இந்திய நாட்டிற்கே உணர்த்தினோம். ஒரு மாபெரும் வெற்றியை Tamilnadu விளையாடிய 10 Match-யையும் வெற்றி பெற்று இந்தியாவின் முதல் மாநிலமாக வெற்றியடைந்து ஒரு மிகப்பெரிய சுமார் 1 கோடிக்கும் மேற்பட்டு செலவு செய்து விளையாட்டு தரத்தை உயர்த்தி ஓட்டு மொத்த விளையாட்டு வீரர்களும் கூறியதை போல India-வில் Best Nationals ஆக ஒரு மாபெரும் வெற்றியை நிலை நாட்டினோம்.

பிறகு பெண்கள் அணியை வெற்றி பெற பல்வேறு Camp-கள் வைக்கப்பட்டு முதல் முறையாக ஒரு Women Coach-ஐ TNBA Appointment செய்து Federation Cup-ல் Tamilnadu Women Team Silver Medal பெற்று முன்னேறியது. இனிவரும் காலங்களில் Gold Medal வெற்றியடைய எல்லாவிதமான பயிற்சியை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

மற்றும் Punjab-ல் நடைபெற்ற Junior Nationals-ல் Tamilnadu பெண்கள் தங்கப்பதக்கத்தை பெற்று நம் வெற்றியை இந்திய அளவில் உறுதிபடுத்தினோம். இந்த வெற்றி எல்லாம் சதாரணமாக கிடைத்தது அல்ல. TNBA Association நிர்வாகிகளின் கடுமையான உழைப்பு இன்றைக்கும் Players Flight-ல் செல்லக்கூடிய பொருளாதார பலம் மற்றும் கடுமையாக உழைக்கக்கூடிய Coaches என்று மாபெரும் உழைப்பு, உழைப்பு என்பதை மையப்படுத்தி வெற்றியடைந்து கொண்டிருக்கிறோம்.

### General Body Meeting :-

TNBA பொறுப்புக்கு வந்த பிறகு நான் தலைவர் மற்றும் பொருளாளர் மற்றும் பல்வேறு மாவட்ட தலைவர், செயலாளர்களிடம் பேசிய போது பல்வேறு குறைகளையும் செய்ய வேண்டிய பணியையும் குறிப்பு எடுத்து அதை Tuticorin GB Meeting-ல் சுமார் 18 Agenda-வை 29.04.2018 அன்று சுமார் 26 மாவட்ட தலைவர் மற்றும் EC Members முன் நிறைவேற்றினோம்.

### நிர்வாக சீர்திருத்தம் :-

நாம் கூறியதைபோல TNBAவில் சுமார் 8 வருடங்களாக நிலவிய குழப்பங்களால் நிர்வாகம் சீர்கெட்டு பல குழப்பங்களை தங்களுடைய குடும்பத்திற்காகவும் இதை ஒரு வருமானமாக மாற்றி விளையாட்டு வீரர்களையும் மற்ற எல்லோரையும் அடிமைப்படுத்திய காலத்தை இளைய தலைமுறை நாம் தூக்கி எறிந்தோம்.

இப்போது நாம் ஒவ்வொரு நாளும் முன்னேற்றத்தை நோக்கி உயர்ந்து கொண்டிருக்கிறோம். அதற்கான மாற்றங்களை எல்லோரும் General Body Meeting-ல் வரவேற்றார்கள்.

...Cotd Page (2)...

AADHAV ARJUNA
General Secretary

நிர்வாக சீர்திருத்தத்தின்படி Referee Clinic தொடர்ந்து 3 மாதத்திற்கு ஒருமுறை மற்றும் C-Panel Exams முறையாக வைக்கப்பட்டு Referees-யை ஒரு ஒற்றுமையான அமைப்பாக மாற்றி எல்லோரும் சரிசமமாக வருவாய் பெற மாற்றி அமைத்துள்ளோம்.

**Coach License & Smart Card:-**

General Body Meeting Agenda - 12 Coach System பற்றி நீண்ட நேரம் விவாதித்து முடிவெடுத்தோம். அதன்படி ஒரு மாபெரும் மாற்றத்திற்கு நாம் தயாராகப் போகிறோம். ஆம் நாம் நடத்திய Nationals-ல் நாம் Serbia-வில் இருந்து Coach Mr. MILAN OPACIC-யை சுமார் 25 லட்சம் செலவு செய்து கொண்டு வந்தோம். சுமார் 60 நாட்கள் அவர் இங்கு தங்கி நம்முடைய Coaching System பற்றி தெளிவாக, நாம் எவ்வளவு பின் தங்கி உள்ளோம் என்பதை Camp-ல் பயிற்சி எடுத்து ஒரு மிகப்பெரிய சிந்தனையை செய்ய வைத்தார். நம்முடைய நாடு ஏன் இன்றும் 8வது இடத்தில் உள்ளது என்றால் மிக முக்கிய காரணம் நாம் செய்யும் Coaching System சுமார் 30 வருடங்களுக்கு முன்பு எப்படி உள்ளதோ அதைப் போன்று என்று Serbia-வின் Mr. Milan Opacic தெளிவுபடுத்தினார். அதாவது நம் India, Serbia-வை விட சுமார் 30 வருடங்கள் பின்னோக்கி உள்ளது என்பதை உணர்த்தினார். சுமார் 25 வருடங்களாக ஒரே மாதிரியான விளையாட்டை நாம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம். உலகில் Olympic-ல் இன்று Serbia 2வது இடத்தில் உள்ளது என்றால் Mr. Milan Opacic கூறியதை போல International Coach Methods-யை நாம் கற்றுக்கொள்ள தயாராக வேண்டும். அதன் முதற்படிதான் TNBA நடத்தப் போகின்ற ஒரு மாபெரும் Coachers Clinic. மற்றும் அவர்களுக்கான அங்கீகாரமும், மதிப்பும் கொடுக்கக்கூடிய TNBA Coach License & Smart Card.

ஏன் இந்த TNBA Coach License & Smart Card ?:-

ஆம்! நாம் கூறியதை போல Tamilnadu No.1 மாநிலமாக மாற்றிக்கொண்டிருக்கிறோம். அடுத்து India-வை Asia-வின் No.1 நாடாக மாற்ற வேண்டும் என்பதுதான் நம் குறிக்கோளாக, பணியாக இனி இருக்கப்போகிறது. அதற்கு ஒவ்வொரு மாநிலமும், அதில் உள்ள ஒவ்வொரு மாவட்டமும் அதில் உள்ள Schools, Colleges & Clubs என்று அனைத்தையும் ஒருங்கிணைக்க வேண்டும். அந்த ஒருங்கிணைப்பின் மூலம் ஒரு மாபெரும் முன்னேற்றத்தை நோக்கி செல்லவிருக்கிறோம்.

**Coach-ன் இன்றைய நிலைமை :-**

நான் வாழ்வில் இந்த அளவிற்கு முன்னேற்றத்தில் என்னுடைய Coach-ன் பங்கு மிக முக்கியமானது. சிறு வயதில் என் தாயையும், தந்தையையும் இழந்தபோது இந்த கூடைப்பந்தாட்டமும், என்னை உருவாக்கிய Coach-ம் தான் ஒரு அடித்தளமாக இருந்தனர். அதனால்தான் அவர்களுடைய வாழ்வாதாரமும், அவர்களுக்கான பொருளாதார முன்னேற்றமும் ஏற்பட இன்றைக்கு நிர்வாக ரீதியாக பல சீர்திருத்தங்களை உருவாக்கப்போகிறோம்!.

ஒரு விளையாட்டு வீரனுக்கு சரியான குரு (Coach) அமைந்தால் அவன் வாழ்வில் ஒரு மிகப்பெரிய உயர்ந்த இடத்தில் செல்வான் என்பது நம்மில் உள்ள எத்தனையோ Indian Players-ஆக இருக்கட்டும் ஏன்! நானாக இருக்கட்டும் பல சாட்சிகள் உள்ளனர்.

...Cotd Page (3)...

**AADHAV ARJUNA**
General Secretary

ஆனால் இன்றைக்கு School மற்றும் College Coach–ஆக உள்ளவர்களுக்கு அந்த பள்ளி, கல்லூரி நிர்வாகம் சரியான மரியாதையையும் அவர்களுக்கான Salary Commitment–ம் கொடுப்பதில்லை புதியதாக Coach செய்ய விரும்பும் Senior Player–க்கு Coach Clinic என்பதே கிடையாது. சுமார் 25 வருடங்களாக நாம் நம்மை உலகதரத்தில் உயர்த்தி கொள்ளவே இல்லை இதை மாற்றத்தான் வரும் 23.08.2018 to 25.08.2018 உலகதரத்திலான Coaches மற்றும் நம் Indian Coaches வரவழைக்கப்பட்டு உலகத்தரத்திலான பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களின் குறைகளையும் செய்ய வேண்டிய பணியையும் என்னுடைய நேரடி மேற்பார்வையில் குழுக்கள் அமைக்கப்பட்டு நானும் மற்றும் TNBA தலைவர், பொருளாளர் மற்றும் அனைத்து நிர்வாகிகளும் ஒரு மாபெரும் பயிற்சியை மேற்கொள்ளவிருக்கிறோம். இன்றைக்கு பெரும்பாலான இடங்களில் Coach செய்ய பயிற்சி எடுக்காமல் தவறுதலாக Coach செய்து விளையாட்டின் தரத்தை அழிக்கிறார்கள். வாருங்கள் School, College மற்றும் Club என்று எல்லா Coach–ம் ஒருங்கிணைவோம். உங்களுக்கான அனைத்து விதமான Coach செய்வதற்கான Kit, TNBA T–Shirt, Lower, Writing Pad மற்றும் தங்குமிடம், உணவு, போக்குவரத்து, பயிற்சி என்று எல்லா செலவுகளும் TNBA செய்யும். ஒன்றே ஒன்று உங்களுடைய ஒவ்வொரு உழைப்பையும் இனி சரியான முறையிலும் வறுமையிலுள்ள எல்லா Coach–யையும் பொருளாதாரத்தில் முன்னேற்றமும் உங்களுக்கு ஒரு மரியாதையையும் அங்கீகாரத்தையும் TNBA நிறைவேற்றப் போகிறது. ஒரு விளையாட்டு வீரனாக இருந்தபோது நான் பட்ட துன்பங்களும், கஷ்டங்களும் இனிவரும் எதிர்கால விளையாட்டு வீரர்களும் நான் என்றைக்கும் மதிக்கும் Coach–ம் முன்னேற TNBA எடுக்கும் இந்த பணியை வெற்றியடைய நம்முடைய நாடு ஒருநாள் Olympic–ல் இடம்பெறும் போது அதை வழிநடத்திய Indian Coach–ம் நம் Tamilnadu Coach–ஆக இருந்தார்கள் என்பது ஒருநாள் வரலாறாக வரும்.

வாருங்கள்! Tamilnadu–தான் என்றைக்கும் India–வின் வெற்றியை முடிவு செய்யும்.

**TRW (Talent Research Wing):-**

கடந்த 30 வருடங்களாக TNBA பல்வேறு Inter District State Level (U14, 16, 18) Tournament நடத்தியிருந்தாலும் இப்போது புதிய Selection Process–யை அறிமுகப்படுத்தி உள்ளோம்.

Selection Committee மற்றும் TRW Coach Committee முலம் சுமார் 10–க்கும் அதிகமான Coach குழுவுக்கு எந்தவித Pressure இல்லாமல் சுயமாக செயல்படவிட்டு மிகச்சிறந்த 12 பேர் கொண்ட (Boys & Girls) Tamilnadu Team Select செய்யப்பட்டு Coach–ற்கு முழு சுதந்திரம் கொடுக்கப்பட்டு ஒரு மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தி திறமையான மற்றும் அதிலும் ஏழ்மையான விளையாட்டு வீரர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

மற்றும் 12 பேர் கொண்ட குழுவை தவிர சுமார் 30 மாவட்டம் பங்கு பெற்று அதில் 372 Boys Players மற்றும் 350 Girls Players–ல் சுமார் 40 பேர் (Boys & Girls) கொண்ட Players–யை தேர்ந்தெடுத்து Tamilnadu Senior (Men & Women) எதிர்கால அணிக்காக சுமார் 80 பேர் கொண்ட குழு TNBA சொத்தாக நாம் தேர்ந்தெடுத்து NBA–வின் மிகச் சிறந்த Coach

...Cotd Page (4)...

INDERBIR SINGH GILL மற்றும் தமிழகத்தின் சிறந்த Coaches–யை கொண்டு 12.05.2018 to 26.05.2018 அன்று சிறந்த Coaching கொடுக்கப்பட்டு Players பங்குபெற்ற அத்தனை நாட்களும் சிறப்பான தங்கும் வசதி, உணவு மற்றும் Kit என்று TNBA செய்து கொடுத்துள்ளது. இனி இவர்களை எதிர்கால Tamilnadu அணிக்கு மட்டுமல்ல, India அணிக்கு தயார் செய்ய TNBA தன் பணியையும், தேவையான எல்லா முயற்சியையும் தொடங்கியுள்ளது. மற்றும் இந்த 80 TRW Players Insurance Health மற்றும் Rs. 30,000 கீழ் சம்பளம் வாங்கும் பெற்றோர்களாக இருந்தால் Players–க்கான Education Fee–ஐ ARISE FOUNDATION & TNBA செலுத்தும் என்ற அறிவிப்பை நாம் செய்துள்ளோம். இனி எல்லா Under (14, 16, 18) Inter District State Championship–ல் TRW பங்கு மிகப்பெரியதாக இருக்கும்.

ஒரு மிகப்பெரிய Sports Hostel TNBA கூடிய விரைவில் வரும். Education Calendar Year–ல் இருந்து தொடங்கப்படும் என்பதையும் அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் TNBA தெரியப்படுத்துகிறோம், மற்றும் TRW அமைப்பிற்கு என்று சுமார் 5,00,000 (5 Lakhs) TNBA – ARISE FOUNDATION ஒதுக்கியுள்ளது.

**E - Adminstration :-**

இன்றைக்கு எல்லா மத்திய, மாநில அரசுகளே தங்களுடைய தகவல்களை E – Adminstration–ஆக மாற்றியுள்ளது. காலத்தின் முன்னேற்றத்திற்கு தகுந்தாற்போல் நாம் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

முதல் முறையாக TNBA – GS–என்ற அனைத்து மாவட்டங்களை இணைக்கும் மாவட்ட நிர்வாகிகள் மட்டும் கொண்ட Whatsapp மாவட்ட Group தனித்தனியாக உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் www.tnbahub.com என்ற International Standard Website உருவாக்கப்பட்டு அனைத்து TNBA Circular மற்றும் நடவடிக்கைகள் உலகின் எந்த இடத்தில் இருந்தாலும் விளையாட்டு வீரர்களோ, நிர்வாகிகளோ தெரிந்து கொள்ள மிகப்பெரிய செலவில் உருவாக்கியுள்ளோம் மற்றும் நமக்கென்று Youtube GS – TNBA Channel உருவாக்கப்பட்டு அனைத்து TNBA Conduct செய்தவற்றை நேரடி ஒளிபரப்பு செய்துள்ளோம் மற்றும் admin@tnbahub.com என்ற Email மூலம் தகவல் பெறப்பட்டு உடனடியாக 24 மணி நேரத்தில் பதில் அளிக்கக்கூடிய நிர்வாகமாக மாற்றியுள்ளோம். மற்றும் தமிழக அரசிடம் போராடி நமகென்று ஒரு Office J.N. Indoor Stadium–ல் அமைக்கப்பட்டு, சுமார் 5 லட்சம் செலவில் புதுப்பித்து மறு அடையாளத்தை உருவாக்கியுள்ளோம்.

**Selection Committee :-**

TNBA நிர்வாகத்தின் வலிமை என்பது எந்தவிதமான சுயநலத்திற்கோ மற்றும் மிரட்டல்களுக்கோ அடிபணியாமல் Tamilnadu Team (Men & Women) நேர்மையாகவும் மிகச்சிறந்ததாகவும் எடுக்கப்பட்டுள்ளது. Tamilnadu Team பங்கு பெற்ற அனைத்து Nationals விளையாட்டிலும் Coach–ற்கு முழு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. நானோ மற்ற நிர்வாகிகளோ, ஏன்! தலைவரோ, பொருளாளரோ மற்றும் என்னை சார்ந்த குடும்பமோ தலையிட்டதில்லை. முன்பு 9 பேர் நேர்மையாகவும் மற்ற 3 பேர் Recommendation–லும்

...Cotd Page (5)...

இருந்த எழுதப்படாத விதியை தூக்கி எறிந்துள்ளோம். அதுதான் நம் TNBA Association–ன் வலிமை. புதிய வரலாறு உருவாகி கொண்டிருக்கிறது அதற்காக அனைத்து மாவட்ட தலைவர் மற்றும் எல்லா நிர்வாகிகளுக்கும் நான் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

**Women Welfare Committee :-**

ஒரு மிகச்சிறந்த முன்னேற்றம் என்பது ஆண், பெண் சமமாக முன்னேறிய சமூகமாக என்று உருவாகிறதோ அன்றுதான் உண்மையான முன்னேற்றம் உருவாகும். அதன்படி நம் TNBA பெண்களுக்கான பிரச்சனைகளை கேட்டு அதை சரிசெய்யக்கூடிய பணி ஒரு பெண் அமைப்பை உருவாக்கி அதில் Senior பெண் விளையாட்டு வீரர்கள் கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இதை உருவாக்கியதன் நோக்கம் மதிப்புமிக்க திரு. சிதம்பர சூரிய வேலு (தேனி மாவட்ட கூடைப்பந்து தலைவர்) அவர்களிடம் நான் பேசிய போது நான் கேட்ட ஒரு கேள்வி – ஏன் ? தேனி போன்ற மாவட்டங்களில் பல வருடங்களாக Under – 14, 16, 18 என்று எந்தவிதமான Inter District State Championship–ல் பெண்கள் அணி பங்கெடுப்பதில்லை என்று கேட்ட போது அவர் கூறிய பதில் நகர்புறங்களை தவிர கிராமபுறங்களில் அடிப்படை வசதி இல்லாத ஊர்களில் பெண்கள் வீட்டை விட்டு இன்றும் வர தயங்குகின்றனர் மற்றும் நாம் எவ்வளவு சலுகைகள் கொடுத்தாலும் பெற்றோர்கள் பெண் என்ற காரணத்திலான பயத்தில் அவர்கள் விளையாட்டை ஒரு பெண் விரும்பினாலும் சமூக கட்டுப்பாடுகளுக்காக அனுமதி அளிப்பதில்லை என்று கூறினார். இதே காரணத்தை திரு. ராம்பிரபு (இராமநாதபுரம் மாவட்ட கூடைப்பந்து தலைவர்) கூறினார். அதன் பிறகுதான் உருவாகியது இந்த (Women Welfare Committee) மாநில அளவில் திருமதி. அனிதா போன்று இந்திய நாட்டிற்காக விளையாடிய விளையாட்டு வீராங்கணையும் மற்றும் Senior விளையாட்டு வீராங்கணைகளும் கொண்டு இதை ஒரு மிகப்பெரிய அமைப்பாகவும் பெண் வீரர்களை உருவாக்கக்கூடிய அவர்களுக்கு தேவையான குறிப்பாக TRW மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் வீரர்களுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் கல்வி விளையாடுவதற்கு தேவையான kit, Training Programme என்று WWC (Women Welfare Committee) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மற்றும் இதை மாவட்ட அளவில் 2 பெண்கள் பிரதிநிதி கேட்கப்பட்டு அதில் சுமார் 14 மாவட்டங்கள் பெண்கள் பெயர்களை பதிவு செய்துள்ளனர். இனி மாவட்ட பெண்கள் பிரதிநிதிகளாக அவர்கள் அமையும்போது பின்தங்கிய மாவட்டங்களில் ஒரு ஆண் நிர்வாகியும் மற்றும் பெண் நிர்வாகியும் இணைந்து நடத்தும் Coaching மற்றும் Training Programme–ல் மிகப்பெரிய அளவில் இனி எதிர்காலத்தில் பெண் விளையாட்டு வீரர்கள் உருவாகுவார்கள் என்பது உண்மை மற்றும் இந்த அமைப்பிற்காக TNBA & ARISE FOUNDATION சுமார் 5,00,000 (5 Lakhs) நிதி ஒதுக்கீடு தற்சமயம் ஒதுக்கியுள்ளது.

**Inter District Championship Changes :-**

சுமார் 30 வருடங்களாக ஒரே மாதிரியான Under–14, 16, 18 Inter District Championship போட்டியை நடத்திக் கொண்டிருந்தோம். Boys Team 30 & Girls Team 26 மொத்தம் 56 அணிகள் கொண்ட மிகப்பெரிய போட்டியை, வெறும் 5 நாட்களில் முடித்து, தமிழ்நாடு அணியை உருவாக்கிக் கொண்டிருந்தோம். அது, முற்றிலும் தவறானது. சுமார் 11 நாட்கள்

...Cotd Page (6)...

நடத்த வேண்டியதை 5 நாட்கள் நடத்தும்போது மேலும் திறமையான வீரர்களை நாம் அடையாளம் காண்பது மிகவும் கடினம். மற்றும் நடத்தும் குழுவுக்கு ஒரே நேரத்தில் சுமார் 900 வீரர்கள் மற்றும் Coaches & Referees என்று சரியான தங்கும் வசதியும் இல்லாமல் இருந்தது இதை மாற்றி ஆண்கள் / பெண்கள் போட்டியை இரண்டு மாவட்டங்களில் தனித்தனியாக மிகவும் பின்தங்கியுள்ள மாவட்டங்களில் நடத்தி ஒரு மிகப்பெரிய வெற்றியாகவும், விளையாட்டு வீரர்களுக்கு எல்லாம் சரியான நேரத்தில் கொடுத்து மிக சமீபத்தில் நடந்து முடிந்த Under-18 Junior Championship - Kanyakumari மற்றும் Tuticorin-ல் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கி TRW Camp-ல் சுமார் 40 - Boys & 40 Girls வீரர்களை தகுதியான நபர்களை தேர்ந்தெடுத்துள்ளோம். இந்த வரலாற்றின் முதல் வெற்றிக்கு காரணமான திரு. பொன். ராபர்ட் சிங் (Chairman - Kanyakumari District Basketball Association) மற்றும் திரு. V.V.D. பிரம்மா அண்ணாச்சி (President - Tuticorin District Basketball Association) அவர்களுக்கு TNBA சார்பாக நன்றி!

**Transparency Account:-**

TNBA Association நம்பி உள்ள ஆயிரக்கணக்கான வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் முன்னேற வேண்டுமென்றால் நம்மிடம் பொருளாதார பலம் மிகப்பெரிய அளவில் இருக்க வேண்டும். நாம் பொறுப்பேற்ற 2017 செப்டம்பர் மாதத்தில் TNBA Accounts சுமார் 7 லட்சம் கடனாக இருந்தது மற்றும் சுமார் 1986 முதல் 2006 வரை Accounts Income Tax-ல் பதிவு செய்யப்படவில்லை. இதை ஏன் செய்யவில்லை என்ற பதில் இன்றுவரை இல்லை.

ஆனால் இப்போது வரலாற்றில் முதல் முறையாக TNBA-க்கு என்று Pancard வாங்கப்பட்டு 2015-2017 வருடங்களுக்கான Accounts Income Tax-ல் தாக்கல் செய்யப்பட்டு பொறுப்பேற்று Senior Nationals TNBA & ARISE FOUNDATION மூலம் நடத்தி இதுவரை TNBA விளையாட்டு வீரர்களுக்காகவும், நம் மாநிலத்திற்காகவும் சுமார் 1.30 கோடி செலவு செய்து, வரவு-செலவு Income Tax-ல் தாக்கல் செய்து நம் நேர்மை தன்மையை நிலைநாட்ட Tuticorin-ல் நடந்த G.B. Meeting-ல் நம் பொருளாளர் முதல் முறையாக Budget TNBA 2015, 2016, 2017 மற்றும் Projection 2018-யை தாக்கல் செய்தார். அவருக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்கள்.

**முன்னேற்றத்தை நோக்கி:-**

பல வெற்றிகள், நிர்வாக சீர்திருத்தங்கள், பொருளாதார பலம், விளையாட்டு வீரர்களுக்கு அடிப்படை வசதி என்று நாம் முன்னேறினாலும் செய்ய வேண்டிய பணி இன்னும் பல மடங்கு அடைய வேண்டிய இலக்கு வெகுதூரம். ஆம்! இப்படி பல வெற்றிகள் நம் TNBA எல்லா மாவட்ட தலைவர் மற்றும் நிர்வாகிகளின் ஒற்றுமையால் என்னுடைய பணியை செய்ய ஊக்கப்படுத்தியதால் நாம் நம் முதல் அடியை எடுத்து வைத்துள்ளோம். இப்படி 10 வருடங்களாக பல குழப்பங்கள் நிலவியதால் பல நிர்வாக பணிகள் முடங்கி விளையாட்டு வீரர்கள் வாழ்வு கேள்விக்குறியானது. அதை நாம் எல்லோரும் இந்த 10 மாதங்களில் சீர் செய்து மாநில, மற்றும் பல மாவட்ட தலைவர்கள் ஒத்துழைப்புடன், வளர்ச்சி ஒன்றே என்ற இலக்குடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். மதிப்புமிக்க மறைந்த திரு. FRANKLIN PANDIYAN (President - Vellore District Basketball Association) அவர் இறப்பதற்கு முன்பு

...Cotd Page (7)...

Chennai Zone District Match–ல் பங்கெடுத்து தனிப்பட்ட முறையில் எங்களிடம் ஒன்றை கூறினார். இந்த Association எண்ணற்ற மனிதர்களின் உழைப்பால் உருவாகியது. ஆனால் இன்று சில சுயநல மனிதர்களால் விளையாட்டு வீரர்களின் வாழ்க்கை கேள்விக்குறியனாது, உங்களை போன்ற இளைய தலைமுறைதான் இதை மாற்ற முடியும், நல்லவர் ஒதுங்கியதால்தான் இன்று இந்த குழப்பம். என்னுடைய முழு ஆதரவும், ஆலோசனையும் என்றும் இளைய தலைமுறைக்கே என்றும் அதன் மூலம் இந்த Association–ம் விளையாட்டு வீரர்களும் உயர்ந்த இடத்திற்கு செல்வார்கள் என்று கடைசியாக என்னிடமும், தலைவர் அவர்களிடமும் தன் மனதில் உள்ள வார்த்தைகளை கூறினார். அதன் பிறகு அவரது இறப்பில்தான் நாங்கள் பங்கேற்றோம். அவர் இறந்தாலும் அவர் செய்ய சொன்ன பணிகளை எவ்வளவு தடைகள் வந்தாலும் செய்து கொண்டிருக்கிறோம்!

மற்றும்

Mr. V.V.D. BREMMA ANNACHI (President – Tuticorin District Basketball Association),
Mr. PON. ROBERT SINGH (Chairman – Kanyakumari District Basketball Association),
Mr. S. SWAMINATHAN (President – Tirupur District Basketball Association),
Mr. R. SATYAM (Secretary – Virudhunagar District Basketball Association),
Mr. Dr. L.M. RAMAKRISHNAN (Former President – TNBA),
Mr. Dr. V. RAGOTHMAM (Treasurer – BFI),
Mr. V.R.N. PANNIRSELVAM (President – Tiruvarur District Basketball Association)
என்று இந்த Association–ல் அனுபவமும், உண்மையும் உள்ளவர்களிடம் ஆலோசனைகளை பெற்றும் அதை மாவட்டங்களில் அடுத்த தலைமுறை மாவட்ட தலைவர் மற்றும் செயலாளர் என்று அனைத்து நிர்வாகிகளும் ஒன்றிணைந்து TNBA Association விளையாட்டு வீரர்களையும், நம் மாநிலத்தையும் முன்னேற்றி கொண்டிருக்கிறோம். இன்று எல்லா தடைகளையும் உடைத்தெறிந்து முன்னேற்றத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம்!

ஆனாலும் ஒன்று, இரண்டு பேர்தான் குடும்பத்திற்காகவும், பதவி ஆசைக்காகவும் அதன் மூலம் இதை ஒரு தொழிலாக மாற்றி அடிமைப்படுத்தி சுயநலமாக இந்த TNBA Association–யை மாற்ற சிந்திக்கிறார்கள்! அந்த சிந்தனையை ஒரு நாள் உங்களை உங்கள் பதவியிலிருந்து தூக்கி எறியும்! இளைய தலைமுறை நாங்கள் வளர்ச்சி ஒன்றையே குறிக்கோளாக வைத்து உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்! TNBA Association நாளை இந்தியாவின் பலமிக்க அமைப்பாக மாறிக்கொண்டிருப்பதுதான் அவர்களுக்கு நாம் சொல்லும் பதில்! வேலை இல்லாதவர்களுக்கு நாம் பதில் கூறி கூறிக்கொண்டிருப்பதால் நம் காலத்தின் அருமையை இழப்போம்! முடிந்தது உங்கள் அழிவு வேலை! இனி புதிய TNBA Tamilnadu–வை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். புதிய India–வை உருவாக்கப் போகிறோம்.

தலைவர் அண்ணா கூறியதைபோல கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இது மூன்றும் இல்லாதவர்கள் எவ்வளவு பெரிய சக்தியாக இருந்தாலும் TNBA Association வளர்ச்சிக்கு யார் தடையாக இருந்தாலும் தூக்கி எறியவும் தயங்க மாட்டோம்!

...Cotd Page (8)...

TNBA யாருக்கும் அடி பணியாது. சுமார் 25000 விளையாட்டு வீரர்களை முன்னேற்ற ஒவ்வொரு நொடியும் உழைத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு குடும்பமோ இல்லை சுயநலமோ இனி இல்லை. இப்படித்தான் சுமார் 27 மாவட்ட தலைவர் மற்றும் செயலாளர்கள் என பங்கேற்ற நாம் நடத்திய 2 பொதுக்குழுவிலும் ஒற்றுமையை நிலைநாட்டி விளையாட்டு வீரர்களுக்கு நம் Tamilnadu Nationals-ல் வெற்றி பெற்றதற்கு தமிழக வரலாற்றில் முதல் முறையாக உழைத்தவனுக்கு சரியான ஊதியம் கொடுக்க வேண்டும் என்பதை முதல் முதலில் சுமார் 10 லட்சம் Prize Money நம் தமிழ்நாடு விளையாட்டு வீரர்களுக்கு கொடுத்தோம்! இந்திய அளவில் இதுவரை யாரும் இதை செய்ததில்லை என்பது வரலாறு! இதுதான் வளர்ச்சி!

கூடிய விரைவில் அடுத்து மாவட்ட சங்கங்களை பொருளாதாரத்தில் வலிமையானதாக மாற்ற பல திட்டங்களை செய்து கொண்டிருக்கிறோம். அதற்காக எல்லா மாவட்ட சங்கங்களும் Bank Account -TNBA Pancard மூலம் ஆரம்பிக்கப்பட்டு பொருளாதாரத்தில் சுயமான மாவட்டமாக மாற்றி மாவட்ட விளையாட்டு சங்கம் மூலம் School Level League ஆரம்பிக்க உள்ளோம்.

அதற்கு உங்களிடம் உள்ள ஆர்வமும், உழைப்பும் மட்டும் போதும். கூடிய விரைவில் TNBA அதற்கான அறிவிப்பை வெளியிடும். இனி வரும் காலங்களில் நம் India அணியை வலுப்படுத்தக்கூடிய Coach மற்றும் விளையாட்டு வீரர்களை உருவாக்குவதே நம் பணி. அதன் மூலம் நம் India அணி ஒரு நாள் China-வை வெல்லும். அந்த ஒற்றை குறிக்கோளுடன் நாம் நம் TNBA ஒரு மாபெரும் முன்னேற்றத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

**இப்படிக்கு,**
**உங்களில் ஒருவனாக! முன்னேற்றத்தை நோக்கி!**

Date : 13.07.2018

– ஆதவ் அர்ஜுனா
**பொது செயலாளர்,**
**தமிழ்நாடு கூடைப்பந்து சங்கம்.**